
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | அக்டோபர் 1992 | இதழ் 10



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்
2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

ஈரோட்டில் நீங்கள் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு

வெள்ளி : மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை)

சனி : மக்கள் சந்திப்பு

## தலைப்புச் செய்திகள்


1. பாவமும் பரிகாரமும் 1-7
2. இன்றே நீங்கள் கர்த்தரைச் சந்திக்க நேர்ந்தால் உங்கள் நிலை என்ன? 8-12
3. குழந்தைகள் வயதுக்கேற்ப வளராத போது 13-16
4. தெரிந்து கொள்ளுங்கள் 17-20
5. மக்கள் ஏன் வீழ்ந்து போகிறார்கள்? 21-25
6. மோரோசைச் சபியுங்கள் 26-27
7. இயேசு கிறிஸ்துவின் பத்துக்கட்டளைகள் 28

# THIRUMARAIAASAAN

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 5 October—1992 Issue 10


**ஆசிரியவுரை**

## பாவமும் பரிகாரமும்

தற்காலத்தில் பாவத்தைப் பற்றி யாரும் அதிகமாகக் கவலை படுவதாகத் தெரியவில்லை. அது கவலைப்பட வேண்டிய பிரச்சனை என்றும் பலர் நினைப்பதுமில்லை. தங்களுக்கு விருப்பமான, சௌகரியமான எதையும், எப்படியும் செய்யலாம்; அதை நியாயப் படுத்துவதற்கு பின்னர் ஆதாரங்களையும், ஆட்களையும் தேடிக் கொள்ளலாம். என்று நினைக்க ஆரம்பித்து விட்டனர். சமீப காலத்தில் மக்களை பயமுறுத்துவது **எய்ட்ஸ்** என்னும் நோய். இந்நோயைப் பற்றி மக்கள் மிகவும் பீதியடைந்துள்ளனர். அந்தக்கவலை இந்த நோயோடு சம்பந்தப்பட்டிருக்கும் ஒழுக்கக் கேட்டினால் சமுதாயம் சீரழிகிறதே என்பதினால் ஏற்படுகிற கவலை அல்ல அதற்குப் போதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லையே என்ற கவலை தான். இந்தக் கொடிய நோய், சுபாவத்துக்கு விரோதமான ஆண்புணர்ச்சி காரணமாக உண்டாகிறது என்றும் ஆகவே அவ்விதமான ஒழுக்கக் கேடுகளைச் செய்யலாகாது என்று கடிந்து புத்தி சொல்லி எச்சரிக்கிறார்களா? என்றால் அப்படிப்பட்ட வார்த்தைகளோ, எச்சரிப்புகளோ கிடையாது. ஆண்புணர்ச்சி கடவுளால் வெறுக்கப்படுகிற காரியம். இயற்கைக்கு விரோதமானது என்று கண்டித்து உணர்த்துவதற்குப் பதிலாக அது பால் உறவு கொள்ளுகிற எவருக்கு வேண்டுமானாலும் வரலாம் என்று நியாயப்படுத்துகின்றனர்.

அதே போலக் கருக்கலைப்பு (abortion). அது பாவமான காரியம் என்ற எண்ணம் மறைந்து கொண்டு வருகிறது. சொல்லப்

போனால் அப்படிச் செய்யாமல் இருப்பதுதான் சமுதாயத்துக்கு நாம் இழைக்கும் தீங்கு என்று எண்ணத் துவங்கி விட்டனர்.

அது ஒரு வகையில் சிசு கொலை. அதற்குப் பதிலாக புலன்களை அடக்கி ஆளவும், கருத்தரிக்காமல் இருக்கக் கூடிய தடுப்பு முறைகளைப் பின்பற்றலாம் என்ற உணர்வும் இல்லை. இன்னும் லஞ்சம் அல்லது கையூட்டை எடுத்துக் கொள்வோம். நீங்கள் யாரைக் கேட்டாலும் சரி. அது குற்றம் என்று தயங்காமல் சொல்லுவார்கள். ஆனால் எல்லோருமே அதைச் செய்கிறார்கள். ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ''அது தவிர்க்க முடியாத தீமை'' என்றாவது ஒத்துக் கொண்டார்கள். இன்றைக்கு அது தீமையே அல்ல; 'காலத்தின் கட்டாயம்' 'தேவைப்படுகிற நடைமுறை' என்றாகி விட்டது. வர, வர லஞ்சத்துக்கு இரசீதே கூடக் கொடுப்பார்கள் போல் இருக்கிறது.

பல நாடுகளில் சன்மார்க்கத்தைப் பற்றிய போதனைகளை பள்ளிச் சிறுவர் சிறுமிகளுக்குப் போதிப்பது கிடையாது. நல்லது எது, கெட்டது எது என்று போதிக்கும் யோக்கியதை, யாருக்கும் கிடையாது என்று சிலர் வாதித்துத் திசை திருப்பிவிட்டு விட்டனர். அதன் விளைவு என்ன? ஒழுக்கமின்மை, பிறர் பொருள் மீது இச்சை, பொய் ஆகிய ஜென்ம சுபாவங்கள் கட்டுப்பாடின்றி இளைய சமுதாயத்தில் வளர்ச்சியடைந்துவிட்டன. இப்படிச் சில தலைமுறைகள் சென்ற பிறகு அவர்களுடைய வாழ்க்கை முறைகளை ஆராய்ந்து பார்த்தபொழுது, பயப்படும் அளவுக்கு நிலைமை போய்விட்டது இப்பொழுது ஒழுக்க நெறிகள் போதிக்கப்பட வேண்டும் என்கின்றனர். அதை அன்று சான்றாண்மையில் அக்கறையுள்ளவர்கள் கூறின பொழுது நிராகரித்தனர். சொல்லப்போனால் பள்ளிகளில் மட்டும் அல்ல; வீடுகளிலேயே தார்மீக, ஒழுக்க நெறிகள் போதிக்கப்பட வேண்டும். ஒருவேளை படிப்பறிவில்லாத பெற்றோர்கள் உள்ள வீடுகளில் அது சாத்தியம் இல்லாவிட்டால் கூட அது பள்ளிகளில் போதிக்கப்பட வேண்டியது அவசியம்.

உலகம் ஏற்றுக்கொள்ளுகிறதோ இல்லையோ, உலகில் நன்மையும் தீமையும் கலந்து கிடக்கிறது. சரி என்பவைகளும் உண்டு; தவறு என்பவைகளும் உண்டு, உண்மையும் உண்டு; பொய்யும் உண்டு. எல்லாம் சம அளவிலும் இல்லை. ஒன்று மற்றொன்றைக் காட்டிலும் சிறப்பாக இருக்கிறது. ஒன்றுக்கு மற்றொன்றைக் காட்டிலும் அதிக கிராக்கியுமுண்டு, அதே போல மனிதர்களிலும் நல்லவர்கள் கெட்டவர்கள் உண்டு. நீங்கள் யாரை நல்ல குடிமகன் என்று சான்று பகர்வீர்கள்? யார் சிறந்த ஒழுக்க நெறிகளைக்கடைப்

பிடிக்கிறார்களோ அவர்களையே நல்லவர்கள்என்பீர்கள். ஏனெனில் சிறந்த நற்பண்புகள் உண்மை பேசுகிறவர்கள், நாட்டின் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்கள், எப்பொழுமே நல்லவை-களையே செய்ய நாடுவார்கள்.

யாரை மோசமானவர்கள் என்று கூறுவீர்கள்? பாவம் செய்-கிறவர்களை. அப்படியானால் பாவம் என்பது என்ன? எதெல்லாம் தீமை பயக்குமோ, கேடுள்ளதோ அவைகளே பாவங்கள். அநீதி, தேவபக்தியின்மை, ஒழுக்கக் கேடுகள், பொய்கள் யாவும் பாவப் பட்டியலில் உள்ள சில குணாதிசயங்கள். புதிய ஏற்பாட்டில் அப்-போஸ்தலனாகிய யோவான் பாவத்திற்கு இலக்கணம் கூறுகிறார்; **''பாவம் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறு-கிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்''** *(1யோவான் 3:4)* அதன் விளக்கமாவது தேவனுடைய பிர-மாணம் இலக்கு. ஒருவன் அந்த இலக்கைக் குறி வைத்து எய்கிறான். ஆனால் அது தவறி விடுகிறது. ஆகவே பாவம் என்பது ''குறி தவறிய நிலை'' என்றாகிறது. யோவான் மேலும் கூறுகிறார்: **''அநீதியெல்லாம் பாவம்''** (1 யோவான் 5:17) வேறு ஒரு இடத்தில் **''பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்-டாயிருக்கிறான். ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான்.** (1 யோவான் 3:8) என்கிறார்.

அநேகமாக, மக்கள் பலரும் பாவத்தைப் பற்றி பேசினாலோ அல்லது நம்முடைய வாழ்க்கையில் எங்கோ தவறு இருக்கிறது என்று கூறினால் கூடக் கோபித்துக் கொள்கின்றனர். அவர்கள் மனம் போன போக்கில் உல்லாசமாய் வாழ்வதற்கு, பாவம் பற்றிய போதனைகள் அவர்கள் மனச்சாட்சியை குற்றப்படுத்தும் என்ற எண்ணத்தால் அப்படி வெறுப்படைகின்றனர். கொஞ்ச கால-மாகவே, ''உனக்கு நல்லது என்று பட்டால் செய்; உனக்கு அப்படி ஒரு ஆசை இருந்தால், நிறைவேற்று'' என்ற பாணி மனநிலை வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஆனால் யார் என்ன நினைத்துக் கொண்டு எதைச் செய்-தாலும் பாவத்தின் விளைவுகள் மனுக்குலத்தை அழிவுக்கு இழுத்துச் செல்லும் என்பதில் சந்தேகமே வேண்டாம். பால் உறவில் உள்ள கேடுபாடுகள் ''எய்ட்ஸ்'' மற்றும் பல கொடிய நோய்களைப் பிறப்பிக்கும். பொய் பேசுவது பல விதமான துன்பங்களைத் தரும். சட்டத்தை மீறுகிறவன் சிறைத் தண்டனை அடைவான். மது அருந்துவது மூளையைப் பாதிக்கிறது. குடித்து விட்டு போதையில் வண்டி வாகனங்களை ஓட்டுகிறவன் நிலை தடுமாறி தனக்கும் மற்றவர்களுக்கும் அபாயத்தை உண்டாக்கு-கிறான், புகை பிடிப்பது நுரையீரலைப் பாதித்து, புற்றுநோய்

போன்ற கொடிய நோய்களுக்கு வித்திடுகின்றன. இருதய நோய்க்கும் காரணமாக இருக்கிறது. இப்படியே ஒவ்வொரு பாவத்தினால் விளையும் தீமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஒருவேளை ஒருமனிதன் தன்னுடைய பண பலத்தினாலும் புத்திசாலித்தனத்தினாலும் இம்மையில் பாவத்தின் விளைவுகளுக்குத் தப்பிக் கொண்டாலும், மறுமையில் தேவனுடைய நியாயத் தீர்ப்பில் அவைகளுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டும். (2 கொரி 5:10 ரோமர் 2:6) அப்போஸ்தலனாகிய பவுல் **''பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்''** *(ரோமர் 6:23)* அவரே, கலாத்தியத் திருச்சபைக்கு எழுதின நிருபத்தில் **''மோசம் போகாதிருங்கள்; தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாமிசத்துக்கென்று விதைக்கிறவன் மாமிசத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்** *(கலா 6:7,8)* என்று எழுதுகிறார்.

இப்படி எச்சரிக்கப் பட்டிருந்தும் பெரும் பான்மையான மக்கள் பாவத்தில் மூழ்கிக்கிடப்பதற்குக் காரணம், பாவம்என்றால் என்ன? அதன் விளைவுகள் எப்படிப்பட்டது என்று தெரியாததே என்று சொல்லலாம் அவர்களுக்கு பாவத்தைப் பற்றியும் அதன் கேடுகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறி, அதிலிருந்து விடுதலையடையும் மார்க்கத்தையும் கற்பிக்க வேண்டும். பாவம் செய்கிறவர்கள் பிசாசின் பிள்ளைகள் என்றுவிளக்கி அவனையும் அவனுடைய கிரியைகளையும் அழிப்பதற்காகத்தான் தேவகுமாரன் தோன்றினார் என்றும் சொல்ல வேண்டும். *(1 யோவான் 3;8)* மேலும், **''உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.**

**ஏனெனில் மாமிசத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினுடையவைகள் அல்ல அவைகள் உலகத்தில் உண்டானவைகள்,**

**''உலகமும் அதின் இச்சையும் ஒழிந்து போம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.''** *(1 யோவான் 2:15-17)*

ஆனால் தேவனுடைய சித்தம் என்ன? ''இயேசு கிறிஸ்து நம்முடைக பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டார் என்று அறிவீர்கள். அவரிடத்தில் பாவம் இல்லை'' (1 யோவான் 3:5) பவுல் ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மை யும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர் களில் பிரதான பாவி நான்'' (1தீமோ1 ;5) என்றும் அதற்கு விளக்கம் அளிக்கும் வகையில், ''அன்றியும் நாம் பெல னற்றவர்களாயிருக்கும் போது, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.

நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணி-வான்.

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன், தம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் (5;6-8) எனவும் மேலும், ''ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்க கிருபையானது பிரசன்னமாகி

நாம் அவபக்தியையும், லௌகீக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ணி

நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் நமது தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து வினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும், எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது.

அவர் நம்மைச் சகல அக்கிரமங்களின்று மீட்டுக் கொண்டு தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற் கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர் களாகவும், தம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத் தந்தருளினார். (தீத்து 2:11-14)

ஆக, பாவம் என்பது உண்மை. அது உலகத்தில் இருக்-கிறது. அது நமக்குள் இருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்து, உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரண்டு, நாம் பாவத்திலிருந்து விடுதலையாவதற்கு உதவினார். இது எப்படி ஆகும்? முதலாவது நாம் அவரை விசுவாசிக்கவேண்டும். கிறிஸ்துவே அப்படிச் சொல்லியிருக்கிறார்...... நானே அவர் என்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்-களிலே சாவீர்கள் (யோவான் 8:24) நாம் விசுவாசித்த பிறகு

நம்முடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட வேண்டும். ''மனந்திரும்பாமற் போனால் மடிவது திண்ணம்'' என்கிறார் இயேசு (லூக் 13:3) மனந்திரும்புதல் என்பது ஒன்றைச் செய்வதிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதோடு நின்று விடுவது மட்டும் அல்ல; போய்க் கொண்டிருக்கிற பாதையை மாற்றி சரியான பாதையில் நடப்பது—அதாவது பாவத்திலிருந்து விடுதலை, பாவம் செய்வதை அறவே விட்டுவிடுவதை வற்புறுத்துகிறது. அதன் பிறகு, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்ய வேண்டும் என்று கூறுகிறது, அவர் சொல்வதைக் கவனியுங்கள். **''மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்.**

**மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்** (மத் 10:32,33)

இறுதியாக, ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார். அவர் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, பரமேறுவதற்கு முன்பாக தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை **''நீங்கள் உலகம் எங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும், சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.**

**விசுவாசமுள்ளவனுகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்''.** (மாற்கு 16:15,16)

பின்னர் பெந்தேகோஸ்தே நாளன்று எருசலேமில் கூடி வந்திருந்த திரளான மக்களுக்கு சுவிசேஷப்பிரகடனம் செய்தார்கள். அதைக் கேட்ட மக்கள் பலபேர், இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, 'நாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டனர். அதற்கு: **நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்''** என்று பதில் அளிக்கப்பட்டது. (அப் 2:38) மேலும் கீழே 41-ம் வசனத்தில் **''அவர்களுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள், அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.** வசனம் 47-ல் **''இரட்சிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் அனு-**

தினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்.'' என்று கூறுகிறது.

இப்பொழுது நாம் புரிந்து கொண்டது என்ன? 1) மனுக்குலம் பாவத்துக்குள் மூழ்கிக்கிடக்கிறது 2) அதனால் மனித வாழ்க்கைக்கு இம்மையில் ஏற்பட்ட இழப்பு ஈடு செய்ய முடியாதது. 3) அதோடு நில்லாமல் மறுமையிலும் நித்திய அழிவைச் சம்பாதித்துக் கொடுக்கக் கூடியது, ஆனால் கிறிஸ்துவானவர் உலகிற்கு இறங்கி வந்து, சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டு உலகத்தின் பாவத்தைப் போக்க தம்மை ஒப்புக் கொடுத்தார். இவைகளை எவன் ஒருவன் விசுவாசித்து, அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறானோ அப்படிப்பட்டவனை கர்த்தர் இரட்சித்துத் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்கிறார். அதாவது நம்முடைய பாவங்கள் அனைத்தையும் மன்னிக்கிறார். தேவனுடைய பிள்ளையாக — கர்த்தருடைய குடும்ப அங்கமாக ஏற்றுக் கொள்கிறார். தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் அவருக்கு உண்மையாக நடந்து கொண்டால் இம்மையிலே மாத்திரமல்ல, மறுமையிலும், சதா காலமும் அவரோடே கூட இருக்கலாம். (வெளி 2:10).

நண்பரே! இவைகளெல்லாம் கற்பனை வளம் நிறைந்த ஒரு மனிதனால் புனையப்பட்ட கதை என்று எண்ணுகிறீரா? இவைகளெல்லாம் நடக்கக் கூடிய காரியமா? ஆம், நண்பர்களே! இது ஒரு கதை தான். ஆனால் உண்மையாக நடந்த கதை. பாவம் உலகத்தில் இருப்பதையும், அது உண்மையென்றும் நாம் காண்கிறோம். நமக்கும் நம்முடைய நண்பர்களுக்கும், பாவத்தால் ஏற்படுகிற துன்பங்களை நாம் பார்த்துக் கொண்டும் அனுபவித்துக் கொண்டும் இருக்கிறோமே!

அதே போல இயேசு கிறிஸ்து இந்த உலகத்துக்கு வந்தது உண்மை. அவரை விசுவாசித்து அவருக்குக் கீழ்படிகிறவர்களுக்கு பாவ மன்னிப்பு அளிப்பார் என்பதும் கூட உண்மை. பரலோகமும் உண்மை. கர்த்தருக்கு உண்மையாய் நடக்கிற அனைவரும் அதைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். அதே போல நரகம் இருப்பதும் உண்மை பாவவாழ்க்கையில் உழன்று மரிக்கிறவர்கள் அங்கேசென்று வேதனை அடைவார்கள் என்பதும் உண்மை.

ஆகவே, நீங்கள் இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். **பாவமா, மன்னிப்பா? இரட்சிப்பா, இழப்பா? மோட்சமா, நரகமா?** இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் புத்திமான்களா நீங்கள் இருக்க வேண்டும் என்பதே எங்கள் மன்றாட்டும் ஜெபமும்.

**E.Z. செல்வநாயகம்**

# இன்றே நீங்கள் கர்த்தரைச் சந்திக்க நேர்ந்தால் உங்கள் நிலை என்ன?

வாழ்க்கை என்றால் என்ன-என்பது பற்றி பலர் சரியாக மதிப்பீடு செய்வதில்லை. அது நாம் நினைப்பதைக் காட்டிலும் பொருள் பொதிந்தது; சிந்தனைக்குரியது. ஆனால் சிலருடைய செயல்முறைகளைப் பார்த்தால் நாளை என்று ஒன்று உண்டு என்பதை அவர்கள் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. நாம் சதா-காலமும் வாழ்ந்து கொண்டேயிருப்போம் என்பது வேறு சிலரு-டைய எண்ணம். பலர் திடீர் திடீர் என்று நம் கண் எதிரிலேயே மரிப்பதைக் காண்கிறோம். இன்னும் பல மரணங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். ஆனால் அவைகளைப் பற்றியெல்லாம் சிந்-தித்துப் பார்ப்பதேயில்லை. அது அவர்களுக்குத்தானே நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? என்று எண்ணி, கண்டு கொள்ளாமல் வழக்கம் போல நடந்து கொள்ளுகிறோம். நம்முடைய நிலையை சிறிது நேரம் ஒப்பிட்டுப் பார்க்காமல் நம்முடைய காரியங்களைப் பார்த்துக் கொண்டு நம் மன விருப்பத்தின்படி தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது ஞானமான காரியம் அல்ல. நம் வாழ்க்கையை பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கத் தூண்டும் வகையில் நான் உங்களை ஒரு கேள்வி கேட்கட்டும். இன்று நீங்கள் கர்த்-தரைச் சந்திக்க நேர்ந்தால் உங்கள் நிலை என்ன? அதாவது இன்று நீங்கள் மரித்துப் போக நேரிட்டால் உங்கள் நிலை என்ன? ஆம். இந்தக் கேள்வி உங்களுக்கு மட்டுமல்ல நான் உள்பட எல்-லாருக்கும் பொருந்தும். ஏனெனில் உலகத்தில் பிறந்த எல்லோருமே ஏதோ ஒரு கால கட்டத்தில் மரித்தே ஆக வேண்டும். ஆகவே இதைப்பற்றி சிறிது சிந்திப்போம்.

தற்காலத்தில் சடுதி மரணத்தைப் பற்றி அதிகமாய்க் கேள்விப்படுகிறோம். இதயநோய், இரத்தக் கொதிப்பு, விபத்து என்று எத்தனை எத்தனையோ விதங்களில் மக்களின் உயிர் பிரிக்கப்படுகிறது. அது நமக்கும் எந்த சமயத்திலும் நேரலாம் அல்லவா? அப்பொழுது நம்முடைய நிலை என்ன? நீங்கள் கர்த்-தரைச் சந்திக்க ஆயத்தமாக இருக்கிறீர்களா? ஒரு வேளை நீங்கள் 'நான் இவ்வளவு சீக்கிரமாக சாவேன் என்று நினைக்கவேயில்லை. இரட்சிப்பைக் குறித்து பின்னே பார்க்கலாம். இப்பொழுது அதற்கு என்ன அவசரம்' என்று சொல்வீர்களா! அப்படியானால் வாழ்க்-கையைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கிற எண்ணம் எவ்வளவு தவறானது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்,

ஒருவன் இளைஞனோ, முதியவனோ, நல்ல உடல் நலம்
உள்ளவரோ வியாதியுள்ளவரோ எப்படிப்பட்ட நிலையில் இருந்-
தாலும் ஒரு நாள் மரிக்கப் போவது உறுதி. நாம் விரும்புகிறோமோ
இல்லையோ நாம் கடவுளை நம்புகிறோமோ இல்லையோ அதைப்-
பற்றி யெல்லாம் பேச்சுக் கிடையாது மரணம் உறுதி. ஆனபடி-
யால் நம்முடைய இவ்வுலக வாழ்க்கையின் பெரும் பகுதியை
வரப்போகிற நித்திய வாழ்வு சம்பந்தமான சிந்தனையில் ஈடு
படுத்துவதே அறிவுடையோர் செயல்.

இப்படிச் சொல்லும் போது சிலபேருக்கு மரணத்துக்குபிறகு
மறுவாழ்வு ஒன்று இருக்கிறது என்கிற விஷயத்தில் நம்பிக்கை
இல்லை. அப்படிப்பட்டவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். அவர்கள்
சரீர மரணமே மனித வாழ்வின் இறுதி என்ற எண்ணத்தில் எந்த
அநியாயத்தைச் செய்தாலது இந்த வாழ்க்கையில் எல்லா சுகத்-
தையும் அனுபவித்து விடவேண்டும் என்ற துடிப்பில் பல பாவங்-
களைக் கூசாமல் செய்கிறார்கள். அவர்கள் மிருகங்கள் பறவைகள்
நீர் வாழ் ஜந்துக்கள் போன்று தங்களுடைய வாழ்க்கையும் இந்த
உலகத்தோடு முடிந்து போகிறது என்று எண்ணுகிறார்கள். இப்-
படிச் சிந்திக்கிற குறைமதியாளர்களைப் பார்த்து **"இம்மைக்-
காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை-
யுள்ளவர்களாக இருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்-
கிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாயிருப்போம்"**
என்று இடித்துரைக்கிறார் பவுல் (1 கொரி 15:19) நீங்கள்
எப்படிப் பட்ட நம்பிக்கையுள்ளவர்கள்? இம்மை, மறுமை என்-
பதை விசுவாசிக்கிறீர்களா?

நான் ஒரு இரகசியத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். பலர்
எண்ணிக் கொண்டிருக்கிறபடி நம்முடைய வாழ்க்கை கல்லறையோடு
முடிந்து போவதில்லை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்
மரணத்துக்குப் பிறகு ஒரு வாழ்க்கை உண்டு என்பதை வேதா-
கமம் திட்டமாகச் சொல்லுகிறது. எபிரேய நிருபத்தில் **"அன்றி-
யும், ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்பு
அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றபடியே
எல்லாருக்கும் சம்பவிக்கும்"** (எபி 9:27) கடவுள் ஒருவர்
இருக்கிறார் என்பதையும் அவருடைய குமாரன் தான் இயேசுகிறிஸ்து
என்பதையும் ஒருவர் ஏற்றுக் கொள்ளாமல் கூட இருக்கலாம்
அதனால் தேவனுடைய வசனங்கள் பொய்யாகி விடாது. அந்தப்படி
முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும்
தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு
உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் 'என்று எழுதி-

யிருக்கிறது. "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்கு கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14; 11, 12) இவைகளையெல்லாம் நீங்கள் இப்பொழுது நம்பாமல் கூட இருக்கலாம், அது பற்றிப் பரவாயில்லை. தேவன் நடக்கும் என்று சொல்லுகிற காரியங்கள் உரிய காலங்களில் நடக்கும் போது உங்களையும் அறியாமல் உங்கள் முழங்கால்கள் முடங்கும், உங்கள் நாவுகள் அறிக்கையிடும்.

மேலும் கர்த்தர் சொல்லுகிறார்: பொது உயிர்த்தெழுதல் நடக்கும் பொழுது கல்லறையில் உள்ள அனைவரும் எழுந்து வருவர் என்று. யோவான் 5: 24-29ல் உள்ள வசனப்பகுதி கூறுகிறது. "என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுள்ளவராயிருக்கிறது போல குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராகயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனாயிருக்கிறபடியால் தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும், அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினைய அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்''.

**மேற்கண்ட வசனப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளவைகள் என்ன?**

சரீரத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் ஆன்மாவில் செத்தவர்களாக இருக்கும் மக்கள், அவருடைய சத்தத்தைக் கேட்டு தேவனிடத்தில் விசுவாசம் வைத்தால் ஆக்கினைத் தீர்ப்படையார்கள். ஏனெனில் அவர்கள் ஆன்மீக மரணத்தைக் கடந்து விட்டார்கள், அதாவது அவருக்குக் கீழ்ப்படிந்த மக்கள் நித்திய நரகத்துக்குத் தப்பி கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் புதுவாழ்வைப் பெற்று நித்திய வாழ்வுக்கான நம்பிக்கையோடு வாழ்கின்றனர் ஆயினும் குறிப்பிட்டுள்ள ஒரு நாள் வரும் அந்நாளில் நல்வினை தீவினை செய்தவர்களும் நீதிமான்களும் அக்கிரமக்காரர்களும் ஆகிய அனைவரும்

தங்கள் கல்லறையிலிருந்து உயிரோடே எழுந்து வருவர். நல்வினை செய்தவர்கள் அல்லது அவருடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துக் கீழ்ப்படிந்தவர்கள் நித்திய ஜீவனுக்கென்றும், தீவினை செய்தவர்கள் அல்லது அவருடைய வார்த்தைக்குச் செவி கொடாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடையும்படிக்கும் எழுந்திருப்பார்கள் என்று விளக்கம் கொடுக்கிறார்.

மேலும் மரணத்துக்குப் பிறகும், உயிர்த்தெழுதலுக்குப் பிறகும் நியாயத் தீர்ப்பு ஒன்று உண்டு என்றும் கூறுகிறார். தீயவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடைவதற்கு எழுந்திருப்பார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறதே, பின் எதற்கு நியாயத் தீர்ப்பு? தீயவர்கள் நியாயத் தீர்ப்பு நாளிலே விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு நித்திய அழிவுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவர் கர்த்தர்தாமே நீதியுள்ள நியாயாதிபதி. அவர் பாரபட்சமில்லாமல் நியாயம் விசாரிப்பார். அப்போஸ்தலனாகிய பவுல் 'மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயம் தீர்ப்பார். அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதன் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கபண்ணினார்' என்கிறார் (அப் 17:31) இங்கே சொல்லப்படுகிற நீதியுள்ள நியாயாதிபதி கிறிஸ்துவே. அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றும், அவர் மூலமே மனுக்குலத்துக்கு நம்பிக்கை உறுதி செய்யப்பட்டிருக்கிறதென்றும் அவரே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறார். மேலும் 2கொரி5:10ல்ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டும்' என்று கூறுகிறார். இறுதியாக கிறிஸ்துவானவர் நியாத்தீர்ப்பின்போது தீயவர்கள் நல்லவர்கள் நிலைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது தீயவர்கள் நித்திய ஆக்கினைக்கும், நல்லவர்கள் நித்திய ஜீவனுக்கும் அனுப்பப்படுவர் என்று கூறுகிறார். (மத்25:46). அதை ஒருவராலும் ஒருபோதும் மாற்றவே முடியாது.

நண்பனே, சகோதரியே! இன்று நீ மரிக்க நேர்ந்தால் உன் நிலை என்ன? கர்த்தரை சந்திக்க ஆயத்தமா? நீ கர்த்தருக்குக் கீழ்படியாமல் இருந்தால் நீ கர்த்தரை சந்திக்க ஆயத்தமாக இல்லை என்று பொருள். நீ மரிக்கும்போது என்ன நிலையில் இருக்கிறாயோ அதே நிலைதான் நியாயத் தீர்ப்பிலும் நித்தியத்திலும் தொடரும்.

காலமெல்லாம் நரகத்தில் கழிக்க விரும்புவாயா? கேவலம், அற்ப ஜந்துக்களான கொசு, மூட்டைப் பூச்சிக் கடிகளையே சில இரவுகள் பொறுத்துக் கொள்ளாமல் அலறிப் புடைக்கிறோமே, அழுகையும் பற்கடிப்பும் நிறைந்த அவ்விடத்தில் சதாகாலங்களிலும் இருப்பது என்பது எவ்வளவு கடினமானது என்று சிந்தித்துப் பார்! அது மாத்திரமல்ல பிசாசும் அவனுடைய தூதர்களும் அவனால் ஆட்கொள்ளப்பட்ட அக்கிரமக்காரர்கள் அனைவருமே அங்கே தான் இருப்பார்கள்.

J.C சோட்

**நான் என் நியாயத்தை தேவனிடத்தில் ஒப்புவிப்பேன்**

ஆனாலும் நான் தேவனை நாடி, என் நியாயத்தைத் தேவனிடத்தில் ஒப்புவிப்பேன்.

ஏனெனில் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்:

தாழ்ந்தவர்களை உயரத்தில் வைத்து, துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறார்.

அவர் பூமியின்மேல் மழையை வருஷிக்கப் பண்ணி, வெளி நிலங்களின் மேல் தண்ணீர்களை வருவிக்கிறார்.

தந்திரக்காரரின் கைகள் காரியத்தை முடிய நடத்தக் கூடாதபடிக்கு, அவர்களுடைய உபாயங்களை அவர் அபத்தமாக்குகிறார்.

அவர் ஞானிகளை அவர்களுடைய தந்திரத்தாலே பிடிக்கிறார். திரியா வரக்காரரின் ஆலோசனை கவிழ்க்கப்படும்.

அவர்கள் பகற்காலத்திலே அந்தகாரத்துக்குள்ளாகி மத்தியான வேளையிலே இரவில் தடவுகிறது போலத் தடவித் திரிகிறார்கள்.

ஆனாலும் எளியவனை அவர்கள்வாயிலிருக்கிற பட்டயத்துக்கும் பெலவானின் கைக்கும் விலக்கி இரட்சிக்கிறார்.

யோபு 5; 8-15

# குழந்தைகள் வயதுக் கேற்ப வளராத போது...

எங்களுக்குத் தெரிந்த நண்பர் குடும்பத்தில் ஒரு சிறு பையன் இருக்கிறான். பிறக்கும் போது மற்ற குழந்தையைப் போலத் தான் அவனும் ஆரோக்கியமாக பிறந்தான், நாட்கள் செல்லச் செல்ல வளர வேண்டிய அளவுக்கு குழந்தை வளரவில்லை. அதன் பெற்றோர்களின் மனதில் கவலை தான் வளர்ந்தது ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் அது குப்புற விழுந்து, வயிற்றால் உந்தி பின்னர் தவழவும், எழுந்து, நிற்கவும் அது முயற்சியே எடுக்கவில்லை. போட்டது போட்டபடியே கிடக்கும். வளர்ச்சிக்கான எவ்வித அறிகுறியும் தென்படவில்லை.

அந்தப் பெற்றோர்களுக்கு ஒரே கவலை, அவர்கள் தங்கள் குழந்தையைப் பற்றி ஏதேதோ மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டிருந்தனர். அவைகள் எல்லாம் வெறும் கனவாகப் போய் விட்டது. அவன் வளர்ந்து வாலிபனாகி குடும்பத்தின் குல விளக்காகத் திகழ வாய்ப்பில்லை என்ற உண்மை பேரிடியாக இருந்தது. அது மாத்திரமல்ல அது எந்த நேரத்திலும் சாவைத் தழுவலாம் என்றும் கவலைப்பட்டனர்.

சகோதரிகளே! சரீரப் பிரகாரமாக ஒரு குழந்தை வளர வேண்டியபிரகாரம் வளரத் தவறினால் நமக்கெல்லாம் எவ்வளவு கவலையாக இருக்கும்! யோசித்துப் பாருங்கள். ஆனால் ஆவிக்குரிய வளர்ச்சி குன்றி-யிருக்கிற மக்களைப் பார்த்து நமக்கு அப்படி ஒரு கவலையுண்டா? யோவான் 3;3-5 ன் படி நாமும் கூட ஆவியினாலும் ஜலத்தினாலும் மறுபடியும் பிறந்திருக்கிறோமே! அதாவது கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் தேவனுடைய குடும்பத்தில் பிறந்த குழந்தைகள். ஆகவே நாமும் கூட ஆவியில் வளர வேண்டுமென்று நம்முடைய பரமபிதா எதிர்பார்க்கிறார்.

ஒரு குழந்தை எவ்வாறு வளர்கிறது? அதற்கு வேண்டிய ஆகாரம் அன்பு, மற்றும் அதற்குத் தேவையானவைகளை உரிய நேரத்தில் கொடுக்கிறதினால் வளர்கிறது. எங்களுக்குத் தெரிந்த அந்த நண்பருடைய குழந்தையைப் போன்று இறிஸ்துவுக்குள் பிறந்த ஆவிக்குரிய குழந்தைகளாகிய நாம் கூட பிறக்கும் போது ஆரோக்கியமாகவே பிறந்தோம். நாம் இயேசுகிறிஸ்துவின் மாசற்ற இரத்தத்தினால் நம்முடைய பாவங்கள் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டோம் (வெளி 1;6)

தேவனுடைய குடும்பத்தில் குழந்தைகளாகப் பிறந்திருக்கிற நமக்கு பிதாவாகிய தேவனுடைய அன்பு அபரிமிதமாக அளிக்கப்பட்டிருக்கிறது. ''தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான் தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்'' என்று 1 யோவான் 4:16ல் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியானால் நாம் வளர்வதற்கு இன்னும் என்ன தேவை? போஷாக்கான உணவும், பயிற்சியும்தான். 1 பேது 2:3ல் "நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல் திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்'' என்று சொல்லப் பட்டிருக்கிறது. திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலை ஆவலோடு நாம் பருகினால் நல்ல வளர்ச்சியடைந்து பெலனடைவோம்.

முதலாவது நாம் சுலபமான சத்தியங்களாகிய ஞானப் பாலை பருகவேண்டும். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக சாதம் காய்கறிகள் மற்றும் கடினமான ஆகாரமாகிய முட்டை மாமிசம் ஆகியவைகளை ஜீரணிக்கக்கூடிய அளவு குழந்தைகள் பலம் அடைவது போல நாமும் சத்தியத்தை ஆழமாகக் கற்கவும் அதை தியானிக்கவும் பயிற்சி எடுத்துக் கொள்வோமானால் நம்முடைய ஆவிக்குரிய நிலையிலும் பலம் அடைவோம். ''பாலுண்கிறவன் குழந்தையாக இருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும். ஞானேந்திரியங்களை உடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்'' (எபி 5: 13,14)

நாம் பால் போன்ற இலகுவான சத்தியங்களையே ஜீரணிக்க விரும்பாத மனநிலை உள்ளவர்களாக இருப்போமானால் எங்கள் நண்பருடைய குழந்தையைப் போல பலவீனமாகத் தானே இருப்போம்! நாம் ஆவியால் பலவீனர்களாகவும் மற்றவர்களுடைய உதவிக்காக ஏங்கி நிற்பவர்களாகவும் தான் இருப்போம்.

அடுத்து சரீர வளர்ச்சிக்குப் போலவே ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் ஆகாரம் மட்டும் போதாது, பயிற்சியும் முக்கியம். ஆவிக்குரிய பயிற்சி என்பது சோதனைகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதாகும். கர்த்தருடைய வசனங்களைப் படித்து அதன் வழியில் நடப்பதும் அது கூறுகிற அறிவுரைகளை நம் அன்றாட வாழ்க்கையில் கடைபிடிப்பதும் ஆகும். நாம் கற்ற சத்தியங்களை நம்முடைய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அயலகத்தார்களுக்-

கும் சொல்வது, நோயாளிகளைப் பார்த்து ஜெபிப்பது, அவர்களு-டைய தேவைகளைச் சந்திப்பது, முதியவர்களுக்கு ஒத்தாசை புரிவது, துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்லி அவர்களுக்கு தெம்பூட்டுவதும் ஆகும். கர்த்தரின் மேல் நம்பிக்கையாயிருந்து நம்முடைய பிரச்சனைகள் அனைத்துக்கும் அவர் போதுமானவர் என்று விசுவாசிப்பதும் ஆகும்.

நாம் சரீரப்பிரகாரமாக ஒரு வேலையும் செய்யாமல் சாப்-பிடுவதும், உறங்குவதுமாக இருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், என்ன ஆகும்? நம்முடைய உடம்பு ஆரோக்கிய-மாக இருக்காது. பல வியாதிகள் தொற்றிக் கொள்ளும். அதைப் போலவே நாம் கர்த்தருடைய வசனத்தை வாசித்து தியானித்து அவைகளை கைக் கொள்ளாமல் போனால், ஆவியில் பலவீன மடைந்து நம்முடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டு கர்த்-தருடைய பிள்ளைகளுக்குரிய தெளிவோடு இருக்க முடியாமல் நோய்வாய்ப்பட்டு ஆவிக்குரிய ஆகாரத்தை சரியாக ஜீரணிக்க முடியா-மல் ஆவிக்குரிய மரணமும் அடைவோம்.

எவ்வளவு சோகமான காரியம்! பிறக்கும் போது நல்ல ஆரோக்கியமாக இருந்த குழந்தை வயதுக் கேற்ப வளராமல் இருந்தால் நம்முடைய தகப்பனாகிய பரமபிதாவுக்கு எவ்வளவு துக்கமாயிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். சரியான ஆகா-ரம் எடுத்துக் கொள்ளாமல் நாளுக்கு நாள் மெலிந்து கடைசியில் மரணத்தைத் தழுவும் போது நம்முடைய தகப்பனாகிய பரம பிதாவுக்கு எவ்வளவு துக்கமாக இருக்கும்!

நாம் யோவான் நற்செய்தி நூலில் பெத்தானியா என்னும் ஊரில் வாழ்ந்த இரண்டு சகோதரிகள் பற்றி வாசிக்கிறோம். மார்த்தாள் என்ற சகோதரி சரீரத்துக்கடுத்த காரியங்களில் நாட்ட-முள்ளவளாய், தான் ஆன்மீகக்காரியங்களில் ஈடுபாடு கொள்ளாதது மட்டுமல்ல, தன் சகோதரியாகிய மரியாள் ஆன்மீக காரியங்களில் ஈடுபாடு கொள்வதையும் பற்றி புகார் கூறினாள். அதற்கு நமது ஆண்டவரின் பதில் என்ன? 'மரியாள் தன்னை விட்டு எடு-படாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்' என்று மரியாளின் நிலையை பாராட்டுகிறார்.

பெரும்பான்மையான மக்கள் மார்த்தாளைப் போலத் தான் நடந்து கொள்கிறோம். ஆண்களை விட பெண்களுக்கு வேலைப் பளு மிக, மிக அதிகம் என்பது யாவரும் அறிந்த உண்மை. சமையல் துவைத்தல், பிள்ளைகளுக்குத் தேவையான காரியங்களைக், கவனித் தல், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குதல் என்று பலவிதமான வேலைகள் உண்டு. ஆனால் அவைகளைக் காரணம்

காட்டி எனக்குக் கர்த்தருடைய காரியத்தில் ஈடுபாடு கொள்வதற்கு விருப்பம் தான்; ஆனால் நேரமில்லை என்று சொல்வது சரியன்று என்பதைத் தான் ஆண்டவரின் பதில் நமக்குக் கோடிட்டுக் காட்டுகிறது.

சரீரத்தில் **அவனவன்** செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு **ஒவ்வொருவரும்** கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதை வாசித்து தியானியுங்கள். (2கொரி 5:10)

ஆம், சகோதரிகளே! நம்முடைய கணவரும், பிள்ளைகளும் சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டால் போதும்; அவர்களுடைய சரீரத் தேவைகளுக்காகத் தானே பாடுபடுகிறேன் என்று சொல்லி நம்முடைய ஆன்மாவை பட்டினிபோட்டுவிடக் கூடாது. அவர்கள் கர்த்தருடைய காரியங்களில் வளர்ச்சி அடைவது நமக்கு ஒருவேளை பெருமையாக இருக்கலாம். ஆனால் அந்த ஆசீர்வாதத்தில் நமக்கு பங்கு கிடைக்காது.

நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நாம் வேதத்தை வாசித்து அவருடைய உபதேசச் சட்டங்களைக் கைக் கொண்டு அவருடைய வழியிலே நடந்தே ஆக வேண்டும். ஆகவே கர்த்தருடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நம்முடைய வேலைகளை அதற்கேற்றாற் போல் ஒழுங்கு படுத்திக் கொண்டு குடும்பமாக ஆன்மாவுக்குரிய ஆகாரத்தை உட் கொள்ளவேண்டும். போக்கு-வரத்துப் பிரச்சனை, வேலைப்பளு என்று எத்தனையோ சிரமங்-களும் பிரச்சனைகளும் இருக்கலாம். கர்த்தருடைய காரியங்களில் கலந்து கொள்வதால் கிடைக்கும் ஆசீர்வாதமும், கர்த்தருடைய பிள்ளைகளோடு கலந்துறவாடக் கிடைக்கும் மகிழ்ச்சியான அனுபவமும் நாம் படுகிற அந்த கஷ்டங்களோடுஒப்பு நோக்கும்போது மிகமிகப் பெரியது. அதை விட நம்முடைய விசுவாச வாழ்க்கை பெற்றுத் தரும் நித்தியானந்த பாக்கியத்தின் விலை மதிப்பிட முடியாதது.

**பெட்டி பார்ட்டன் சோட்**

**17. இதோ தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கிய-வான்; ஆகையால் சர்வ வல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும்.**

**18. அவர் காயப்படுத்தி காயம் கட்டுகிறார். அவர் அடிக்கிறார்; அவருடைய கை ஆற்றுகிறது.**

யோபு 5:17, 18

# தெரிந்து கொள்ளுங்கள்

## பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாட்டுக்கும் இடையே . . .

பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் ஒன்றாக இணைத்து ஒரே புத்தகமாக இணைக்கப்பட்டிருப்பது. தவறுதலாக அல்ல. காரியமாகத்தான். ஏனெனில் புதிய ஏற்பாட்டின் வேர் பழைய ஏற்பாட்டில் இருக்கிறது. பழைய ஏற்பாடு இல்லாமல் புதிய ஏற்பாட்டைப் புரிந்து கொள்ள முடியாது. புதிய ஏற்பாட்டின் நாயகராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிப் பல தீர்க்கத் தரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் உரைக்கப்பட்டுள்ளன. இன்னும் சொல்ல போனால் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு இரண்டுமே கிறிஸ்துவை மையமாகக் கொண்டு பின்னப்பட்டிருக்கிறது.

ஆனால் யோவான் 1;17ல் நாம் வாசிக்கிறபடி ''நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின'' என்று எழுதப்பட்டிருப்பதன் பொருள் என்ன? அதாவது பழையஏற்பாடு 'இஸ்ரவேலர்'' என்ற ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்காக கொடுக்கப்பட்டு, அவர்களுடைய சமுதாய, பொருளாதார அரசியல் மற்றும் சமய வாழ்க்கைகளை மையப்படுத்திக் கூறுகிறது. (உபா 5;1-3) ஆனால் புதிய ஏற்பாடு, மொழி, இனம், எல்லை, கலாச்சாரம் ஆகியவைகளையெல்லாம் கடந்து உலகின் எல்லா திசைகளிலும் வாழும் மனுக்குலம் அனைத்தும் உய்வடைவதற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாடு உடல்மார்க்கம், அதாவது உலக சம்பந்தமான ஆசீர்வாதங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. (ஆதி 12: 2-3) ஆனால் புதிய ஏற்பாடோ ஆன்மீக மார்க்கம் அதாவது ஆவிக்குரிய ஆசிர்வாதங்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. (எபே 1; 2)

இந்த முக்கியமான வேறுபாட்டை விளங்கிக் கொள்ளாமல் கிறிஸ்தவ உலகம் குழம்பி நிற்கிறது. இவைகளைப் பற்றி வரலாறும் வேதாகமும் என்ன சொல்கிறது என்பதைக் கவனித்துப் படித்தால் குழப்பம் நீங்கி தெளிவடையலாம்.

இந்த வேறுபாட்டை நாம் புரிந்து கொள்ள முற்படும் முன்பு ஒரு உண்மையை நாம் தெரிந்திருக்க வேண்டும். அது பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் அதாவது பழைய ஏற்பாட்டின் கடைசி நூலாகிய மல்கியா தீர்க்கதரிசன நூலுக்கும் புதிய ஏற்பாட்டின் முதல் நூலாகிய மத்தேயு நற்செய்தி

நூலுக்கும் இடையில் சுமார் நானூறு ஆண்டுகள் இடைவெளி உண்டு என்பதாகும். இந்த நானூறு ஆண்டு கால கட்டத்தில் தேவ ஆவியினால் ஏவப்பட்டுப் பேசின தீர்க்கர்கள் ஒருவர் கூட எழுப்பப்படவில்லை. இந்த கால கட்டத்தை அறிஞர்கள் மௌன காலம் (Silent period) என்று வர்ணிப்பர்.

இதே காலகட்டத்தில் அதாவது சுமார் கி.மு 336 வாக்கில் உலக நடப்புகளைக் கவனித்துப் பார்த்தால் அசீரியா, பாரசீகம் போன்ற கிழக்கத்திய வல்லரசுகள் நலிவுற்ற காரணத்தாலும் கிரேக்க பேரரசின் கை ஓங்கி வந்ததாலும் மத்தியதரைக்கடல் நாடுகள் கிரேக்கப் பேரரசின் ஆதிக்கத்திற்குள் வந்தன. இதன் நாயகரான மகா அலெக் சாண்டர் என்ற மாசிடோனியா மன்னன் அரசியல் ரீதியாக மட்டுமல்ல. தத்துவார்த்த ரீதியாகவும் கிரேக்க அறிஞர் அரிஸ்டாடலின் அப்போஸ்தலனாகச் செயல்பட்டான். அவன் கிரேக்க நாகரீகத்தையும், பண்பாட்டையும் தான் வென்ற நாடுகளிலெல்லாம் நிலை நாட்ட முயற்சிகள் மேற்கொண்டதால் அந்நாட்களில் கல்வி, வாணிபம், விஞ்ஞானம், வானவியல், மருத்துவம், கட்டிடக்கலை என்று பல துறைகளிலும் ஒரு புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டு நாடுகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு முன்னேறின.

பின்னாட்களில், அதாவது கி.மு 168 வாக்கில் மகா அலெக் சாண்டரும் தனது 33வது வயதில் காலமான பிறகு கிரேக்கப் பேரரசும் நலிவுற்று உடைந்து அதனுடைய உயர் ராணுவ அதிகாரிகள் வசமாயின. இக் குழப்பத்தை பயன்படுத்திக் கொண்டு யூதர்களுக்குள் சிலர் எழும்பி தாய்நாட்டின் விடுதலைக்காகப் பேராடினர். அவர்களில் முக்கியமானவர்கள் மத்தத்தியாஸின் மக்களாகிய மக்க பேயர்கள். இந்நானூறு ஆண்டு கால வரலாற்றை கத்தோலிக்க சமயத்தார் தங்கள் வேதாகமத்தோடு இணைத்துக் கொண்டிருக்கின்றனர். அவைகளைத் தள்ளுபடி ஆகமங்கள் என்றும் கூறுவர். (Apocrypha)

சுமார் கி.மு 14 வாக்கில் ரோம பேரரசு உதயமாயிற்று அவர்கள் சிதறுண்ட கிரேக்க சாம்ராஜ்யத்தை எளிதில் வென்று ஒரு புதிய வல்லரசாகத் திகழ்ந்தனர். யூதர்களுடைய நாடாகிய பாலஸ்தீனம் கனி வளமும் செழிப்பும் உள்ள நாடு. அன்று நாட்டில் நிலவிய அரசியல் சூழ்நிலை குழப்பமாக இருந்தபடியால் ரோமர் பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றினர். அந்நாட்டின் ஆட்சியில் சம்பந்தப்பட்டவர்களில் ஜூலியஸ் சீசர், அகஸ்தியஸ், ஏரோது என்பவர்கள் பிரபலமானவர்கள். இவர்கள் காலத்தில் யூதர்கள் கொத்தடிமைகளாக சொல்லொணா துன்பத்தினால் அவதிப்பட்டனர்.

இந்தக் காலகட்டத்துக்குச் சற்று முன்பு தான் எழுபது ஆண்டுகள் பாபிலோன் சிறைவாசத்துக்குப் பிறகு யூதர்கள்நெகேமியா எஸ்ரா போன்றவர்களின் தலைமையில் எருசேலமுக்குத் திரும்பி வந்திருந்தனர். அங்கே அவர்கள் அனுபவித்த கொடுமை, துன்பங்கள், வேதனைகள், பட்ட அவமானங்கள் ஆகிய துயர நிகழ்ச்சிகள் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து சோரம் போனதற்குக் கிடைத்த தண்டனைகள் என்று உணர்ந்து கர்த்தரைத் தேடும் முயற்சியில் பேரார்வம் காட்டினர். ஊருக்கு ஊர் ஜெப ஆலயங்கள் தோன்றின. சிறையிருப்பு நாட்களில் தகுதி பெற்ற ஆசாரியர்கள் மேற்பார்வையில் கூடித் தொழும் வாய்ப்பு இல்லாதிருந்த காரணத்தால் ஜெப ஆலயங்களில் பொதுவழி பாட்டுமுறை ஒரு இணக்கமான நடைமுறை இல்லாமல் அவரவர்களுக்குத் தெரிந்த முறையில் தங்கள் பக்தியை வெளிக்காட்டப் பிரயாசப்பட்டனர். அதனால் பல்வேறு சித்தாந்தங்கள், மூடப் பழக்க வழக்கங்கள் பாரம்பரியச் சடங்குகள் உருவாகி அவர்களுக்குள்ளே பல சித்தாந்த வேறுபாடுகள் தோன்றலாயின. அவற்றைப் பின்பற்றியவர்கள் பரிசேயர் (2) சதுசேயர் (3) வேதபாரகர் (3) ஆயக்காரர் என்று பல பிரிவுகளாகப் பிரிந்து நின்றனர்.

**பரிசேயர் :** பரிசேயர்கள் என்றால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்று பொருள் மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் பாரம்பரியங்களையும் கவனமாகக் கைக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்பவர்கள். ஆனால் தங்கள் செயல்களால் மறுதலிப்பவர்கள். வெளிப் பார்வைக்கு பக்தர்கள் மாதிரி காட்டிக் கொள்வார்கள். ஆனால் மாலை மரியாதைக்கும் பேருக்கும், புகழுக்கும் ஆசைப் படுவார்கள். தாங்கள் தான் நியாயப்பிரமாணத்தை முழுமையாகக் கடைப்பிடிப்பவர்கள் என்ற இறுமாப்போடு மற்றவர்களை மட்டமாய் நினைக்கவும் பேசவும் செய்பவர்கள். அவர்களுடைய மாயத்தை இயேசு பல முறை தாக்கிப் பேசியிருக்கிறார். (மத் 15:3-8 மத் 23-ம் அதிகாரம் காண்க.) இவர்கள் ஆவியும், உயிர்த்தெழுதலும், தேவதூதர்களும் உண்டென்று விசுவாசிக்கிறவர்கள். இவர்களில் நிக்கேதேமு, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, கமாலியேல் பவுலாகக் மாறின சவுல் ஆகியோர் பிரபலமானவர்கள்.

**சதுசேயர்கள் :** இவர்களை அரசியல்வாதிகள் எனலாம். அரசாங்கத்துக்கு ஆதரவாக ஒரு நேரமும் யூத மக்களின் சார்பில் ஒரு நேரமும் சமயத்திற்கு ஏற்றாற்போல் நடந்து தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் சுயநலமிகள். எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் மதத் தலைமைப் பதவியைத் தங்கள் வசம் தக்க

வைத்துக் கொள்வதற்கு குறியாக இருப்பவர்கள், உயிர்த்தெழுதலும், ஆவியும், தேவதூதர்கள் ஆகியவைகளை நம்பாதவர்கள் (மாற்கு 12;18 லூக்20:27; அப் 23:8 வாசிக்கவும்)

**வேதபாரகர்**

இந்த பிரிவினர் தங்களை பாபிலோனியச் சிறையிருப்புக்கு முன் தீர்க்கதரிசியாகிய எரேமியாவின் உதவியாளராக இருந்தவர்களின் வம்சாவழியினர் என்று கூறிக் கொண்டு பழைய ஏற்பாட்டை பிரதி எடுத்து விற்பது, மற்றும் தொழில் ரீதியாக எழுத்தராக செயல்படுவதுமாக இருந்தனர்.

**ஆயக்காரர் (அ) பாவிகள்**

இந்த நான்காம் பிரிவினர் மிகப் பெரிய சமுதாயமாக வாழ்ந்தனர்.. இவர்கள் மற்ற பிரிவினர்களால் தாழ்த்தப்பட்டோராகக் கருதப்பட்டனர். இவர்களுடைய சித்தாந்தம் எல்லாம் 'ஏதோ என்னால் முடிந்தது' என் மனச் சாட்சிக்குச் சரி என்று பட்டது. ''மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்.'' பாவமோ, புண்ணியமோ, நரகமோ, மோட்சமோ எதிர் காலத்தை யார் கண்டது? என்று நாம் இன்று விரக்தி வாழ்க்கை வாழவில்லையா? அதைப் போன்றே இம் மக்களும் நிர்விசாரமான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். நியாயப் பிரமாண வரம்புக்கு வெளியே நிற்பவர்கள். (ரோமர் 3:10-23, ரோமர் 6:23, ரோமர் 7:24.)

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் சுமார் கி.மு. நான்காம் நூற்றாண்டில் யோவான்ஸ் ஸ்நானகன் என்ற ஒரு தீர்க்கதரிசி எழும்பி ''பரலோகம் சமீபத்திருக்கிறது மனம்திரும்புங்கள்'' என்றும் ''மேசியா வர விருக்கிறார்'' என்று இயேசுவின் பிறப்பைக் குறித்து முன்னறிவித்தார். அதன் பிறகே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மானிடப் பிறப்பு நடைபெற்று இவருடைய வாழ்க்கை வரலாற்றுடன் புதிய ஏற்பாடு ஆரம்பமானது. ஆகவே புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டின் தொடர்ச்சியன்று. கிறிஸ்தவ மார்க்கம் யூத மார்க்கத்தின் தழுவலோ அல்லது பின் தொடர்ச்சியோ அல்ல. நோக்கங்களிலும், தன்மையிலும் வித்தியாசமானது. பழைய ஏற்பாடு நமக்குப் போதனையாக எழுதப்பட்டிருக்கிறது. (ரோமர் 15:4) புதிய ஏற்பாடு பின் பற்றுவதற்காக எழுதப்பட்டிக்கிறது. (யோவான் 13-34)

E.Z. செல்வ நாயகம்

# மக்கள் ஏன் வீழ்ந்து போகிறார்கள்?

கிறிஸ்தவ வாழ்க்கைப் பாதையில் பயணம் செய்ய ஒப்புக் கொண்டவர்களில் பலர், அப்பயணத்தை முற்றிலுமாக தொடரா-மல் இடையிலே வீழ்ந்து போகும் அவல நிலையானது வருந்தத் தக்க உண்மையாகும். தேவனுடைய ஒரு பிள்ளை சத்தியத்திற்கு விலகி, இறுதியில் வீழ்ந்து போவது சாத்தியமே என்பது சுவிஷேசத் தில் காணும் உண்மை. தேவனுடைய வசனத்தை விட்டு வழுவிப் போகும் சூழ்நிலைகள் ஒருவனுக்கு உருவாகலாம். (எபி.2:1-4) நற்செய்தியின் நம்பிக்கையிலிருந்து விலகிப்போக ஒருவனுக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படும். (கொலோ. 1:21-23). விசுவாசக்குறைவு ஏற்பட்டு ஜீவனுள்ள தேவனிடமிருந்து பிரிந்து செல்ல ஏதுக்கள் உண்டு (எபி. 3:12-13). இந்தப் போதனையை உறுதிப்படுத்த பல வசனங்களைச் சுட்டிக் காட்ட முடியும். என்றாலும் சிந்திக்கக் கூடிய ஒரு மனிதனுக்கு இவை போதும்.

வேதாகமப் போதனைகளை ஏற்றுக்கொண்டு, பின்னர் அவைகளிலிருந்து பின்வாங்குகிற மனிதனுடைய ஆபத்தான நிலை யானது வீழ்ச்சியின் படுபயங்கரத்தை பல மடங்காக்குகிறது. பேதுரு இதை வர்ணிக்கையில் ''ஒருவனுடைய பின்னிலைமை யானது முன்னிலைமையைக் காட்டிலும் கேடுள்ளதாயிருக்கும்''. (2 பேதுரு 2:20-21) என்கிறார். விசுவாசத்தில் நிலைத்திருப்பவர் களுக்கும், பின்வாங்கி வீழ்ந்து போவோருக்கும் உள்ள வித்தியா சத்தை எபிரேய எழுத்தாளன் சுட்டிக்காட்டுகிறார். ''விசுவாசத் தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப் போவானாகில், அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது. நாமோ கெட்டுப் போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்.'' (எபி. 10:38-39). சிலர் கெட்டுப்போக பின்வாங்குகிறவர்களாயிருக்கிறார்கள் என ஒரு வேதாகம எழுத்தாளன் கூறும்போது அதை உண்மை என நாம் ஏற்றுக்கொள்கிறோம். இவ்வாறாக பின்னடைந்து போவோர் மீது தேவன் பிரியமாக இருக்கமாட்டார் என வேதாகமம் கூறும் போதும் அதை அப்படியே ஏற்றுக்கொள்கிறோம். நம்மில் ஒருவராக இருக்கிற — போதகரோ, அல்லது மூப்பரோ அல்லது உதவிக்காரரோ அல்லது சகோதரரோ, வாலிபரோ, முதியோரோ— சகலருக்கும் இந்தச்சட்டம் பொருந்தும். தேவன் எந்த ஒரு தனிப் பட்ட மனிதனையும் பாகுபடுத்திப் பார்ப்பதில்லை. அவர் பார்வை யில் சகலரும் சமமே. பின்னடைந்து போவோர் எவராயினும் முடிவு ஒன்றே. அதைக் குறைக்கும் சந்தர்ப்பங்கள் எதுவும் கிடை

யாது! இந்தக் காரணத்தினால்தான், தன்னுடைய அழைப்பையும் தேர்ந்தெடுக்கப்பட்டதையும் நிச்சயப்படுத்திக் கொள்வதில் கிறிஸ்தவன் உஷாராக இருக்கவேண்டும். (2 பேதுரு 1; 5-11).

புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்பட்ட காலத்திலேயே சில முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் வீழ்ந்து போனவர்களாயிருந்தனர். சிலர் கள்ளப் போதங்களுக்குத் திரும்பியிருந்தனர் (2தீமோ 2: 15 - 19) பிறர் ஏதாவதொரு காரணத்தால் உலகத்தின் பிடியில் சிக்கினர். (2 தீமோ 4:10) சிலர், ''சாத்தானைப் பின் பற்றி விலகிப் போனார்கள்'' என பவுல் கூறினார் (1 தீமோ-5:12-15) சந்தேகமின்றி பலர் தொடர்ந்து அவ்வழியே சென்று கொண்டிருந்தனர் என புதிய ஏற்பாட்டு நிருபங்களிலிருந்து காண்கிறோம். (கலா 1:6-9; 5:7-6; 6:1; 1கொரி 5 மற்றும் பல) முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களின் நேரிடை தலைமையின்கீழேயே இத்தகைய காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததானால், இன்றைய நாளில் அதற்குக் குறைவாக எதிர்பார்க்க முடியுமா?

இத்தகைய வீழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன என்பது உண்மை; சர்ச்சைக்கு அப்பாற்பட்டது. நாம் கேட்க விரும்புவது இதுதான். மக்கள் ஏன் வீழ்ந்து போயினர்? தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையைத் தொடங்கிய பின்னர், இன்று ஏன் மக்கள் பின்னடைந்து போகிறார்கள்? நமது சொந்த ஆவிக்குரிய வளர்ச்சியிலும், பிரிந்து சென்றவர் சிலரை மீட்கும் பணியிலும் ஒரு சரியான அணுகுமுறை நமக்கு உதவவேண்டும்.

விசுவாசத்தில் உறுதியாகத் தரித்திராத சிலர் பின்னடைந்து போகின்றனர். அவர்களுடைய இருதயம் முற்றிலுமாக கிறிஸ்துவுக்குள் திரும்பியிருக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, ஒருவன் கிறிஸ்தவனாகி, பின் தொடர்ந்து கிறிஸ்தவனாக வாழ்வதின் அவசியத்தைக் காணத் தவறி விடுவது. அடுத்து, உறுதியான கிறிஸ்தவனாக மாறப் போதுமானபடி போதிக்கப்படாதது. இந்த இரண்டாவது காரணம் பலமுறைகள் வற்புறுத்தப்பட்டு வந்த போதிலும் மீண்டும் மீண்டுமாக வலியுறுத்த வேண்டிய அவசியமிருக்கிறது ஏனெனில் பல சமயங்களில் ஒரு போதகர் தனது ''வேலை உத்திரவாதம்'' காரணமாக (பலரை சேர்க்கும் பணியுடன் அது இணைந்திருப்பதால் (?) சுற்றுப்புறங்களில் அலைந்து எத்தனை பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடியுமோ அத்தனை பேரையும் அவசர அவசரமாகக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறார்! விளைவு நமக்குத் தெரிந்ததே; 'அரை வேக்காட்டுப்' போதனையே அவர் தர முடிகிறது! அவர் ஞானஸ்நானம் கொடுத்த எல்லோரும்

வெளிப்படையாக 'சபை அங்கத்தினர்கள்' ஆகி விடுகின்றனர்; ஆனால் நடைமுறையில், அவர்கள் அங்கத்தினர்களானதின் அர்த்தமே சிறிதும் அறியாதவர்களாக இருக்கின்றனர். கடைசி விளைவுகள் சோகமானதாக அமைகிறது. இதுவே கடந்த காலங்களிலும் தற்காலத்திலும் நடைபெறும் சூறாவளி மனந்திருப்புதலின் படப்பிடிப்பு.

விதைப்பவன் உவமையில், மனந்திரும்பாத மக்களைப் பற்றிய காரியத்தை இயேசு குறிப்பிடுகையில், ''கற்பாறையின் மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும் போது சந்தோஷத்துடன் வசனத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர் கொள்ளாத படியினாலே, கொஞ்சக் கால மாத்திரம் விசுவாசித்து சோதனைக் காலத்தில் பின் வாங்கிப் போகிறார்கள். முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக்கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களிலும் நெருக்கப்பட்டு, பலன் கொடாதிருக்கிறார்கள்'' (லுக்கா 8: 13-1)4 என்றார். இவர்கள் தங்கள் குழுவின் தீவிரமான சீடர்களாக மாறாதிருந்தனர், இந்த உபதேசத்தின் தொடர்ச்சியாக கொலோசெயர் நிருபம் போதிக்கிறது: ஒருவன் சுவிசேஷத்தில் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், உறுதியாகவும் விசுவாசத்தில் நிலைத்திருக்கவும் வேண்டும். (கொலோ. 1.23) மேலும், ''அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், விசுவாசத்தில் உறுதிப்பட்டு'' பெருக வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. (கொலோ, 2:6–8). அசட்டை செய்யும் பட்சத்தில் வீழ்ந்து போவது சாத்தியமே!

தேவனுடைய வசனத்தின் ஆலோசனைப்படி நடக்கத் தவறுவது பலரின் பின்னடைவிற்கு காரணமாக இருக்கிறது. "ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக் கொண்டிரு ''(2 தீமோ 1:13), நவீன கால, சுயாதீன ஊழியர்கள் ''சட்டங்கள்'' எதையும் நாம் கடைப்பிடிக்கத் தேவையில்லை என்று கூறிய போதிலும், நமக்கு ஒரு 'சட்டம் உண்டு. அதை நாம் கடைப்பிடிக்க வேண்டிய கடமையும் உண்டு. புதிய ஏற்பாடு, கிறிஸ்தவர்களை சட்டப்படி எதற்கும் 'கட்டுப்படுத்தவில்லை' என்ற சுயாதீனப் போதகர்களின் போதனையின் விளைவாக சரீரமாகிய சபைகளிலிருந்து ஒட்டு மொத்தமான விலகல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தால் நாம் ஆச்சரியப்படக்கூடாது! சமீபத்திய ஆண்டுகளாக தங்களுடைய பிரிவுகளில் பிளவுகள் ஏற்படுவதைக் கண்ட நாமகரணக் கூட்டத் தலைவர்கள் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாகி இருக்கின்றனர். மக்களின் நித்திய பாதுகாப்பிற்கு சபை ஒற்றுமை தேவையற்றது

என பல தலைமுறைகளாகப் போதித்துக் கொண்டு வந்தவர்கள் வேறு எதை எதிர்பார்க்க முடியும்? நமது சொந்த சகோதரர்களும் கற்றுக் கொள்ள வேண்டிய சில காரியங்கள் உண்டு! புதிய ஏற்பாட்டு காலத்திலே நடந்ததைப்போல, இன்றும் "அக்கிரமக் காரருடைய வஞ்சகத்திலே நாம் இழுப்புண்டு நமது உறுதியில் இருந்து விலகி விழுந்து போகும் அபாயம் இருக்கிறது." (2 பேதுரு 3:17). விசுவாசத்திற்கு எந்த மதிப்பும் இல்லாத இந்த காலத்தில், மக்கள் விசுவாசத்தில் வாழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்படி? (யூதா 3).

ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தத் தவறுவதும் தேவனை விட்டு சிலர் பிரிந்து செல்ல காரணமாயிருக்கிறது. "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியா யிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ள வராயிருக்கிறாரே மேலும் அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி.... ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்" (எபி. 10:23-25) "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனை யினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவொருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" (எபி. 3:13). ஒரு தனி மனிதனுக்குத் தன்னைப் பற்றிய அக்கரையும் தேவனில் பிறருக்குள்ள அக்கரை பற்றிய சிந்தனையும், பிற மக்களுக்கு அதிகமாக புத்தி சொல்லவும், அன்புடன் ஊக்கப் படுத்தவும் அவனைத் தூண்டும். இத்தகைய செயல்கள் நம் எல்லோருக்கும் அடிக்கடி தேவைப்படுகிறது. நிறைய ஊக்கப்படுத் தினாலும் பலர் தவறி விடுகின்றனரே என சிலர் கேட்கக்கூடும். அது உண்மையே. ஆனால் அதிகமாக சகோதர உற்சாகம் பெற்றால் சிலர் வீழ்ந்து போகமாட்டார்கள் என்பதும் நிச்சயமான உண்மையே. குறிப்பாக, புதிதாக மனந்திரும்பிய சகோதரர்களை அவர்களுடைய பழைய நாமகரணக் கூட்டாளிகள் மீண்டுமாக இழுத்து கொள்ள முயற்சிக்கும் போது, தேவனில் அவர்கள் தரித் திருக்கத்தக்க விதமான அர்த்தமுள்ள புத்திமதிகளைக்கூற நாம் கடமைப்பட்டுள்ளோம். பேதுருவிடம் இயேசு கூறிய வார்த்தை- கள் இங்கு பொருத்தமானதாகக் காணப்படுகின்றன : "நீ குணப்- பட்ட பின்பு உன் சகோதரனை ஸ்திரப்படுத்து" (லூக். 22:32)

"நீங்கள்" பின்னடைந்து போனால், உங்கள் சகோதரர்- களில் சிலர் தங்களுக்குப் பிரியமான பொழுதுபோக்கையும் விடுத்து, உங்களை சந்தித்து தேவனுடைய சத்திய வசனங்களைக் கூறி உங்களை உற்சாகப்படுத்துவதை நீங்கள் விரும்ப மாட்டீர்களா? "நான்" கூட வீழ்ந்து போகக் கூடியவனே என நம்மில் ஒவ்- வொருவரும் எண்ணத்தொடங்கினால், உண்மையிலேயே

பின்னடைந்து போகும் சகோதரர்களின் பேரில் அதிக அக்கரை செலுத்த நம்மை தூண்டுமல்லவா?

''ஒரு சகோதரன் தேவனில் நிலைத்திருக்க, என்னுடைய சந்திப்பு ஒரு திறவு கோலாக இருக்குமா?'' எவ்வளவு கடினமான ஒரு சவால்! ஆனால், கிறிஸ்தவன் தினமும் சவால்களை சந்திக்க வேண்டியவனாக இருக்கிறானே!

ஜெரி மானஸ்கோ                கொசவபட்டி S.S. ராஜன்

## அவர் என்றும் வாழுகிறார்

* அவருக்கு வேலைக்காரர்கள் யாரும் இல்லை என்றாலும் அவரை எஜமான் என்று அழைத்தனர்;
* அவரிடம் மருந்துகள் எதுவுமில்லை; ஆனாலும், அவரை வைத்தியர் என்றனர்.
* பட்டங்கள் எதுவும் பெறவில்லை; ஆனால் அவரை குரு என மதித்தனர்.
* அவரிடம் இராணுவம் எதுவுமில்லை; என்றபோதிலும் இராஜாக்கள் அவருக்குப் பயந்தனர்.
* விளையாட்டு பொம்மைகள் எதுவும் அவரிடமில்லை; என்றாலும் குழந்தைகள் அவரை நேசித்தனர்.
* அவருக்கு ஒரு வீடு கூட சொந்தம் இல்லை ஆனாலும் அவரைப் பின்பற்றிய சீடர்கள் கோடி கோடி.
* அவர் எந்த குற்றமும் செய்ததில்லை; இருந்த போதிலும் அவரை சிலுவையில் அறைந்தார்கள்.
* அவர் எந்த ஆதிக்க போட்டியையும் நாடவில்லை; இருநத போதிலும் உலகம் அவர் பின் சென்றது;
* அவர் மரித்து கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார் அன்றாலும் அவர் இன்றும் வாழுகிறார்

# "மேரோஸைச் சபியுங்கள்"

"மேரோஸைச் சபியுங்கள்; அதின் குடிகளைச் சபிக்கவே சபியுங்கள் என்று கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார்; அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை" (நியா 5:23). தேவனுடைய விருப்பத்திற்கு மாறாக செயல்பட்ட காரணத்தால் இஸ்ரவேல் கானானியர்களால் கைப்பற்றப்பட்டது. யாபீன் என்றும் அவர்களுடைய இராஜாவுக்கு சிசெரா என்பவன் சேனாதிபதியாக இருந்தான். அக்காலத்திலே, தீர்க்கதரிசியும், இஸ்ரவேலை நியாயம் விசாரித்து வந்தவளுமான தெபொராள், பாராக் என்ற அதிபதியோடு பதினாயிரம் பேரைக் கொண்ட சேனையுடன் சென்று சிசெராவை முறியடித்தாள். கானானியர்கள் இவ்வாறாக தோற்கடிக்கப்பட்டு, இஸ்ரவேல் விடுவிக்கப்பட்டது. மகத்தான ஒரு விடுதலை கீதம் அப்போது பாடப்பட்டது. அந்தப் பாடலின் இடையே தான் தலைப்பில் கண்ட வசனம் காணப்படுகிறது. தேவ தூதன் வழியாக தேவனால் உருவாக்கித் தரப்பட்ட பாடல் அது.

"நான் நல்ல ஒரு வாழ்க்கை வாழ்ந்தால் தேவன் என்னைத் தண்டிக்க மாட்டார்" என பல மக்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இதே காரணத்தால், தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர் மேரோஸ் கிராமம் ஏன் சபிக்கப்பட்டது? அம்மக்கள் என்ன தீங்கு செய்தனர்? பதில்: "ஒன்றுமில்லை" என்பதே! அவர்கள் செய்த காரியம் அவர்களுக்குத் தண்டனை பெற்றுத் தரவில்லை. மாறாக செய்ய வேண்டிய நேரத்தில் செய்யத் தவறியதால் தான் அவர்கள் தண்டனைக்குட்பட்டனர். தேவனுக்கு உண்மையிலேயே நாங்கள் தேவைப்படவில்லை; ஏனெனில் எங்களுடைய ஈடுபாடு இன்றியே அந்தப்போரில் வெற்றி கிட்டியது என மேரோஸ் மக்கள் விவாதிக்கக் கூடும் அல்லவா? ஆனால் அது சரியல்ல. பலனை எதிர்பார்க்காது எது சரியெனப்பட்டதோ அதை அவர்கள் செய்திருக்க வேண்டும். இக் கொள்கை இன்று நமக்கும் பொருந்தக் கூடியது. "பகற் காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது", என இயேசு கற்பித்தார். (யோ. 9:4). மேரோஸ் மக்கள் தேவனுக்குப் பணி விடை செய்யும் சந்தர்ப்பத்தை இழந்தனர். மீண்டும் அது ஒரு போதும் வரவில்லை.

இயேசு ஒரு உவமையைச் சொன்னார். ''ஒருவன் தன் திராட்சைத் தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காண வில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்.'' (லூக், 13:6-7) ''விஷக்கனி'' எதுவும் அம்மரத்தில் இருந்ததாகக் குறிப்பிடப்பட வில்லை; எந்தக் கனியும் அம்மரத்தில் காணப்படவில்லை என்றே தெரிகிறது. அது போதும்: ''அதை வெட்டிப்போடு''. இன்று இது போதும். நாம் எப்பொழுதுமே ''கர்த்தருடைய கிரியைகளில் பெருகுகிறவர்களாக'' இருக்க வேண்டும். (1 கொரி. 15:58). ஏனெனில், ''தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவரா யிருக்கிறார்.'' (பிலில். 2:13) கெட்ட செயல்களால் விஷமாக்கப் பட்ட வாழ்க்கை மட்டுமே தேவனால் கண்டிக்கப்படவில்லை; தேவன் விரும்பும் கனியைத் தராத வாழ்க்கையும் தான் அவரால் கண்டிக்கப்படுகிறது.

மோட்சத்திற்குச் செல்ல ஏதுவாக எப்படி வாழவேண்டும் என்பதை நமக்குக் காட்டவே சுவிஷேசத்தில் பல வசனங்கள் எழுதப்பட்டுள்ளன: ''நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்த மாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபை யுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்'' (அப். 20:32), நித்திய ஜீவனை இழந்து, நரகத்தில் தள்ளப்பட, பலா நினைப்பதற்கு மாறாக, நீங்கள் ஒரு கொலைகாரனாகவோ, குடி காரனாகவோ, வேசித்தனம் செய்கிறவனாகவோ, பொய் பேசுகிற வனாவோ, திருடனாகவே அல்லது இத்தகைய தீய செயல்களைச் செய்கிறவராக மட்டும் இருக்க வேண்டுமென்பதில்லை. எதையுமே செய்யாதிருந்தாலும் போதும். தேவனுக்கு ஊழியம் செய்யும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்ட காரணத்திற்காகவும் தண்டிக்கப் பட்டு, நித்திய ஜீவனை இழந்து போவதைக் குறித்து மத்தேயு 25:31-46 வசனங்களில் நியாயத்தீர்ப்பு பற்றி இயேசு குறிப்பிடும் காட்சியில் காணமுடிகிறது. விலையேறப்பெற்ற தைலத்தை இயேசுவின் சிரசின்மேல் ஊற்றிய பெண்மணியின் செயலை மிகவும் பாராட்டிய வசனம் ஒன்று வேதாகமத்தில் காணமுடிகிறது: ''இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்'' (மாற்கு 14:8) என இயேசு கூறினார். தேவன் இதற்கும் மிஞ்சிக் கேட்கவில்லை. உங்களால் கூடுமானதைச் செய்யுங்கள்.

கிளம்துர்மன் கொசவப்பட்டி S.S. ராஜன

# இயேசு கிறிஸ்துவின் பத்துக்கட்டளைகள்

1, முதலாவதும் முக்கியமானதும், ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழுஇருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக'': மாற்கு 12:30

2) அதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கட்டளை: 'உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக'. மாற் 12 : 31

3) இது ஒரு புதிய கற்பனை : 'நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல் நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்'. யோவான் 13:34

4) இது கடைப் பிடிப்பதற்கு சிரமமானது: ''உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்: உங்களைச் சபிக்கிறவர்களை ஆசிர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்''. மத் 5:44

5) இது ஒளி தரும் கட்டளை: ''மனுஷர் உங்களுக்கு எவைகளை செய்யவேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'. மத் 7:12

6) தேட வேண்டிக் கட்டளை: முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் கூடக் கொடுக்கப்படும்'. மத் 6:33

7) இரக்கம் பாராட்டக் கட்டளை : ''உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருப்பது போல நீங்களும் இரக்கமுள்ளவராயிருங்கள்'. லூக் 6:36

8) மிகச் சிறந்தக் கட்டளை : பரலோகத்திலிருக்கிற ''உங்கள் பிதா பூரண சற்குணராயிருப்பது போல நீங்களும் பூரண சற்குணராயிருங்கள்.'' மத் 5 : 48

9) ஊழியக் கட்டளை: ''நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.'' மத் 5:48

10) நிறைவுக் கட்டளை : ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைக்ளைக் கைகொள்ளுங்கள்.'' யோவான் 14:15

**YOUR ATTENTION PLEASE!**

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker: Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker: P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560034
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays - 1:45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bibie Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. M.M. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட, ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

E.Z. செல்வ நாயகம், 2, மணல்மேடு வீதி,
ஈரோடு - 638 002.

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

THE BIBLE TEACHER,
Post Box No.3815,
NEW DELHI - 110 049.

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.

